# அத்தியாயம் I

## ஊராட்சி அமைப்புகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகள், பொறுப்பு முறைமை மற்றும் நிதி சார்ந்த அம்சங்கள் மீதான ஒரு கண்ணோட்டம்

# அத்தியாயம் I

# ஊராட்சி அமைப்புகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகள், பொறுப்பு முறைமை மற்றும் நிதி சார்ந்த அம்சங்கள் மீதான ஒரு கண்ணோட்டம்

## ஊராட்சி அமைப்புகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகள்

### 1.1 முன்னுரை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் திருத்தங்களான, 1992 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட 73வது மற்றும் 74வது திருத்தங்கள் முறையே ஊராட்சி அமைப்புகள் (Panchayat Raj Institutions - PRIகள்) மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (Urban Local Bodies - ULBகள்) ஆகியவற்றிற்கு அரசியலமைப்பு நிலையினை அளித்தன. இதன் மூலம், நாடு முழுவதும் ஒரே சீரான அமைப்பு, காலமுறைப்படியான தேர்தல் மற்றும் நிதிக்குழுவின் மூலம் முறையான நிதி ஒதுக்கீடுகள் போன்றவற்றை உடைய ஒரு அமைப்பு நிறுவப்பட்டது. இத்திருத்தங்களின் தொடர்ச்சியாக, சுய ஆட்சி பெற்ற உள்ளாட்சி அமைப்புகளாக PRIகள்/ULBகள் (Local self-government) செயல்பட, அவற்றிற்கு அதிகாரங்களையும் பொறுப்புகளையும் மாநில அரசுகள் வழங்கிட வேண்டும்.

அதன்படி, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994ஐ மாநில சட்டமன்றம் இயற்றியது. இந்தச் சட்டத்தின் கீழ், மாவட்ட அளவில் மாவட்ட ஊராட்சிகள் (District Panchayats - DPs), இடைப்பட்ட அளவில் ஊராட்சி ஒன்றியங்கள் அல்லது வட்டார ஊராட்சிகள் (Panchayat Unions or Block Panchayat - BPs) மற்றும் கிராம அளவில் கிராம ஊராட்சிகள் (Village Panchayats VPs) என்ற மூன்றடுக்கு அமைப்பு கொண்ட ஊராட்சி அமைப்புகள் முறை நிறுவப்பட்டது.

இதே போன்று, இந்திய அரசியலமைப்பின் பன்னிரண்டாவது அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ளவைகள் உட்பட, பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக நீதிக்கான திட்டங்களை செயல்படுத்தும் பொருட்டு, ULBகளுக்கு அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை வழங்க, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920ஐ மாநில சட்டமன்றம் திருத்தி அமைத்தது.

மாநிலம் மற்றும் PRIகள்/ULBகளின் முக்கிய புள்ளி விவரங்கள் **அட்டவணை 1.1 ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

இவ்வறிக்கையில் இடம்பெற்றுள்ள சுருக்க சொற்களஞ்சிய திரட்டு 221ம் பக்கத்தில் உள்ளது.

**அட்டவணை 1.1: மாநிலத்தின் முக்கிய புள்ளி விவரங்கள்**

<table>
<tr><td colspan="3">மக்கள் தொகை</td><td colspan="4">7.21 கோடி*</td></tr>
<tr><td colspan="3">மக்கள் தொகை அடர்த்தி</td><td colspan="4">ஒரு சதுர கிலோமீட்டருக்கு 555 நபர்கள்</td></tr>
<tr><td colspan="3">பாலின விகிதம்</td><td colspan="4">1,000 ஆண்களுக்கு 996 பெண்கள்</td></tr>
<tr><td colspan="3">நகர்ப்புற மக்கள் தொகை</td><td colspan="4">48.40 விழுக்காடு</td></tr>
<tr><td colspan="3">கிராமப்புற மக்கள் தொகை</td><td colspan="4">51.60 விழுக்காடு</td></tr>
<tr><td rowspan="2">எழுத்தறிவு விகிதம்</td><td colspan="2">PRIகள்</td><td colspan="4">73.54 விழுக்காடு</td></tr>
<tr><td colspan="2">ULBகள்</td><td colspan="4">87.04 விழுக்காடு</td></tr>
<tr><td rowspan="5" colspan="2">PRIகள் மற்றும் ULBகள் ஆகியவற்றின் விவரங்கள்</td><td colspan="2">**PRIகள்**</td><td colspan="2">**ULBகள்**</td></tr>
<tr><td>மாவட்ட ஊராட்சிகள்#</td><td>36</td><td>மாநகராட்சிகள்[1]</td><td>21</td></tr>
<tr><td>வட்டார ஊராட்சிகள்</td><td>388</td><td>நகராட்சிகள்</td><td>138</td></tr>
<tr><td>கிராம ஊராட்சிகள்</td><td>12,525</td><td>பேரூராட்சிகள்</td><td>490</td></tr>
<tr><td>**மொத்தம்**</td><td>**12,949**</td><td>**மொத்தம்**</td><td>**649**</td></tr>
</table>

* 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, மாநிலத்தின் நகர்ப்புற மக்கள் தொகை 3.49 கோடியாக இருந்தது, இது மொத்த மக்கள் தொகையில் 48.40 விழுக்காடு ஆகும்.

# மயிலாடுதுறை மாவட்டத்தில் இன்னும் ஒரு மாவட்ட ஊராட்சி அமைக்கப்படவில்லை.

(ஆதாரம்: இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு, 2011 மற்றும் 2022-23ஆம் ஆண்டிற்கான ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கொள்கை குறிப்புகள்)

## 1.2 PRIகள் மற்றும் ULBகளின் நிர்வாக அமைப்பு

மார்ச் 2022 நிலவரப்படி, தமிழ்நாட்டில் PRI மற்றும் ULB களின் நிர்வாகத்திற்கான நிர்வாக கட்டமைப்புகள் முறையே **இணைப்புகள் 1.1 மற்றும் 1.2ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

## 1.3 PRI மற்றும் ULBகளுக்கு பணிப் பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்படுதல்

(i) இந்திய அரசியலமைப்பின் 73வது சட்டத்திருத்தத்தின் மூலம், பதினொன்றாவது அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள 29 செயல்பாடுகளை PRIகளுக்குப் பகிர்ந்தளிக்க மாநிலத்திற்கு அதிகாரம் அளித்துள்ளது (**இணைப்பு 1.3**). இந்த 29 செயல்பாடுகளின் கீழ் பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படும் பணிகளை மேற்பார்வையிடவும், உதவவும் மற்றும் கண்காணிக்கவும் PRIன் மூன்று அடுக்குகளுக்கு சில அதிகாரங்களை மாநில அரசு வழங்கியுள்ளது.

[1] ஆவடி, சென்னை, கோயம்புத்தூர், கடலூர், திண்டுக்கல், ஈரோடு, ஓசூர், காஞ்சிபுரம், கரூர், கும்பகோணம், மதுரை, நாகர்கோவில், சேலம், சிவகாசி, தாம்பரம், தஞ்சாவூர், தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திருப்பூர் மற்றும் வேலூர்.

(ii) இதே போன்று, 74வது சட்டத்திருத்தத்தின் மூலம், இந்திய அரசியலமைப்பின் பன்னிரண்டாவது அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள 18 செயல்பாடுகளை (**இணைப்பு 1.4**) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பகிர்ந்தளிக்க மாநிலத்திற்கு அதிகாரம் அளிக்கிறது. தீயணைப்பு சேவை தவிர அனைத்து செயல்பாடுகளும் மாநகராட்சிகள் (பெருநகர சென்னை மாநகராட்சி - GCC) தவிர) மற்றும் நகராட்சிகளுக்கு முழுமையாக வழங்கப்பட்டுள்ளன. பேரூராட்சிகளைப் பொறுத்தவரை, 10 பணிகள்[2] மட்டுமே முழுமையாகவும், இரண்டு[3] பணிகள் பகுதியாகவும் பகிர்ந்தளிக்கப்பட்டன. ஆறு[4] பணிகள் இன்னும் பகிர்ந்தளிக்கப்படவில்லை. GCC பொறுத்தவரை, 18 செயல்பாடுகளில் 13 செயல்பாடுகள்[5] பகிர்ந்தளிக்கப்பட்டன (அக்டோபர் 2022 வரை). அவற்றுள் ஒன்றான, சென்னை பெருநகரப் பகுதியின் வீடுகள், தொழிற்சாலை, வணிகம் ஆகியவற்றின் நோக்கங்களுக்காக நீர் வழங்குதல், மாநில சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஒரு அமைப்பான சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தால் (Chennai Metropolitan Water Supply and Sewerage Board - CMWSSB) கையாளப்படுகிறது.

## 1.4 பல்வேறு குழுக்கள் அமைத்தல்

### 1.4.1 மாவட்ட திட்டக்குழு

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994ன் பிரிவு 241(1)ன் படி, மாநிலத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட திட்டக்குழு (District Planning Committee - DPC) அமைக்கப்பட வேண்டும். அரசால் குறிப்பிடப்பட்டுள்ளபடி, DPCன் உறுப்பினர்கள் (i) மாவட்ட ஊராட்சி தலைவர் (DPCன் தலைவர்), (ii) மாவட்டத்தில் உள்ள மாநகராட்சி மன்றத் தலைவர் (மேயர்), (iii) மாவட்ட ஆட்சியர் (DPCன் துணைத் தலைவர்) மற்றும் (iv) மாவட்ட ஊராட்சிகள், பேரூராட்சிகளின் உறுப்பினர்கள் மற்றும் நகராட்சி மற்றும் மாநகராட்சி மன்றங்களின் கவுன்சிலர்கள் ஆகியோர் ஆவர். பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற பேரவையின் உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் DPCன் நிரந்தர சிறப்பு அழைப்பாளர்களாக உள்ளனர்.

பரவல்முறையில் திட்டமிடலுக்கான (decentralised planning) விரிவான தரவுத்தளத்தை உருவாக்க, மாவட்டத்தின் இயற்கை வளங்கள் பற்றிய தகவல்களை சேகரித்தல், தொகுத்தல் மற்றும் புதுப்பித்தல் ஆகியவை DPCன் செயல்பாடுகள் ஆகும். மாநில திட்டத்தைத் தயாரிப்பதற்கு கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் தயாரிக்கப்பட்ட திட்டங்களை, மாநில திட்டக் குழுவிற்கு தொகுத்து வழிவகுக்கிறது.

[2] இணைப்பு 1.4ன் வ. எண்கள் 1 முதல் 10.

[3] இணைப்பு 1.4ன் வ. எண்கள் 11 மற்றும் 12.

[4] இணைப்பு 1.4ன் வ. எண்கள் 13 முதல் 18.

[5] இணைப்பு 1.4ன் வ. எண்கள் 1 முதல் 12 மற்றும் 17.

மார்ச் 2023 நிலவரப்படி, DPCகள் 31 மாவட்டங்களில் திருத்தியமைக்கப்பட்டதுடன், மேலும் ஐந்து[6] மாவட்டங்களில் முதல் முறையாக புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.

### 1.4.2 பிற குழுக்கள்

சுகாதாரம், நகரத் திட்டமிடல், பணிகள், வரிவிதிப்பு மற்றும் நிதி, கல்வி, கணக்குகள் மற்றும் தணிக்கை ஆகியவற்றிற்கான நியமனம் மற்றும் நிலைக்குழுக்கள் நடைமுறையில் இருப்பதாக GCC தெரிவித்தது (அக்டோபர் 2022). மேலும், இக்குழுக்கள் மாதத்திற்கு ஒருமுறை கூடி, அந்தந்த துறை/திட்டங்களை (Schemes/Projects) ஆய்வு செய்ததாகவும்; திட்டங்களின் ஒப்பளிப்பிற்குப் பின், மேற்கொண்டு ஒப்புதலுக்காக மன்றத்திற்கு அனுப்பப்பட்டன எனவும் கூறியது.

பொது சுகாதாரம், நகர திட்டமிடல், பணிகள், வரிவிதிப்பு மற்றும் நிதி, கல்வி, கணக்குகள் மற்றும் நியமனம் ஆகியவற்றிற்கான நிலைக்குழுக்கள் மாநகராட்சிகளில் (Municipal Corporation) அமைக்கப்பட்டதாகவும் ஒப்பந்தங்கள், நகர திட்டமிடல், வரிவிதிப்பு மேல்முறையீடு மற்றும் நியமனம் ஆகியவற்றிற்கான நிலைக்குழுக்கள் நகராட்சிகளில் அமைக்கப்பட்டதாகவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் (Director of Municipal Administration DMA) தெரிவித்தார் (அக்டோபர் 2022).

வரிவிதிப்பு, மேல்முறையீடு மற்றும் நியமனத்திற்கான நிலைக்குழுக்கள் TPகளில் அமைக்கப்பட்டன என்று பேரூராட்சிகளின் ஆணையர் (Commissioner of Town Panchayats - CTP) கூறினார் (அக்டோபர் 2022).

## 1.5 தணிக்கைக்கான ஏற்பாடு

### 1.5.1 முதன்மை தணிக்கையாளர்

உள்ளாட்சி நிதி தணிக்கை இயக்குநர் (Director of Local Fund Audit - DLFA), வட்டார ஊராட்சிகள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கான சட்டப்பூர்வமான தணிக்கையாளர் ஆவார். கிராம ஊராட்சிகளின் (VPக்கள்) கணக்குகள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களால் (தணிக்கை) தணிக்கை செய்யப்படுகிறது. DLFA, VPகளின் கணக்குகளின் மீதான தேர்வாய்வுத் தணிக்கையை (test audit) மட்டுமே மேற்கொள்கிறார். ஒவ்வொரு ஆண்டும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை ஆணையரால் (Commissioner of Rural Development and Panchayat Raj - CRDPR) தேர்ந்தெடுக்கப்படும் இரண்டு விழுக்காடு VPகளுடன் கூடுதலாக 20 விழுக்காடு VPகளையும் DLFA தணிக்கை செய்கிறார்.

ULBகளின் மீதான தணிக்கை DLFAவிடம் ஒப்படைக்கப்பட்டது (ஆகஸ்ட் 1992), அவர் கணக்குகளின் சரித்தன்மையை சான்றளிக்கவும், உள் கட்டுப்பாட்டு அமைப்பை மதிப்பிடவும் மற்றும் இழப்பு, திருட்டு மற்றும் மோசடி வழக்குகளைக் குறித்து தணிக்கை செய்யப்பட்ட நிறுவனங்களுக்கும், மாநில அரசுக்கும் அறிவிக்கவும் வேண்டும்.

[6] செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி, இராணிப்பேட்டை, தென்காசி, திருப்பத்தூர்.

### *DLFAன் தணிக்கை அறிக்கையை தாக்கல் செய்தல்*

தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம், 2014ன் பிரிவு 20ன்படி, உள்ளாட்சி அமைப்புகளின் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளின் தொகுப்பு அறிக்கையை, DLFA ஆண்டுதோறும் அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டும். இதனை அரசு, தணிக்கைத் துறைத் தலைவரின் (CAG) அறிக்கையுடன், சட்டமன்ற பேரவையில் தாக்கல் செய்ய வேண்டும். தமிழ்நாடு உள்ளாட்சி நிதி தணிக்கை விதிகள், 2016, விதி 19ன் படி, DLFA, ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 30 ஆம் தேதிக்குள், சட்டத்தின் 20வது பிரிவின்படி அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட வேண்டிய விவரங்களுடன், முந்தைய நிதியாண்டில் தணிக்கை செய்யப்பட்ட உள்ளாட்சி அதிகார அமைப்புகளின் கணக்குகள் பற்றிய தொகுப்பு அறிக்கையை அரசுக்கு அனுப்ப வேண்டும்.

2019-20 ஆம் ஆண்டிற்கான PRIகள் மற்றும் ULBகளின் தணிக்கை அறிக்கைத் தொகுப்பு, 24 மார்ச் 2022 அன்று சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது. 2020-21 ஆம் ஆண்டிற்கான DLFAன் தொகுக்கப்பட்ட தணிக்கை அறிக்கை, சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்படுவதற்காக அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று DLFA தெரிவித்தார் (மார்ச் 2023).

### *கணக்குகளை சமர்ப்பிப்பதில் இருந்த நிலுவை*

பதினைந்தாவது மத்திய நிதிக் குழுவின் (Central Finance Commission - CFC) வழிகாட்டு நெறிமுறைகள், 2021-26 ஆண்டுகளில், உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியங்களை வெளியிடுவதற்கான ஆரம்ப நிலை நிபந்தனைகளைப் பரிந்துரைக்கிறது. முதல் இரண்டு ஆண்டுகளில், அதாவது 2021-22 மற்றும் 2022-23ல், மொத்த PRIகள் மற்றும் ULBகளின் 25 விழுக்காட்டில், முந்தைய ஆண்டிற்கான தணிக்கை செய்யப்படாத கணக்குகளும் அதற்கும் முந்தைய ஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளும் இணையவழியில் கிடைப்பதை மாநிலங்கள் உறுதி செய்ய வேண்டும். 2023-24 முதல், அந்த ஆண்டிற்கான முழு மானியங்களைப் பெற, முந்தைய ஆண்டின் வருடாந்திரக் கணக்குகளும் அதற்கு முந்தைய ஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளும், 100 விழுக்காடு PRIகள் மற்றும் ULBகளுக்கும் தவறாமல் இணையவழியில் கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

PRIகள், நிதியாண்டு முடிந்த இரண்டு மாதங்களுக்குள்ளும், ULBகள் மூன்று மாதங்களுக்குள்ளும் தங்கள் ஆண்டுக் கணக்குகளை இறுதி செய்ய வேண்டும்.

அனைத்து வட்டார ஊராட்சிகள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளும், சோதனைத் தணிக்கைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம ஊராட்சிகளும் 2021-22ஆம் ஆண்டிற்கான கணக்குகளை சமர்ப்பித்துள்ளதாக DLFA தெரிவித்தார் (நவம்பர் 2022).

ULBகளைப் பொறுத்தவரை, அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள், 2021-22 ஆம் ஆண்டிற்கான கணக்குகளை DLFAக்கு சமர்ப்பித்துள்ளதாக DLFA தெரிவித்தார் (ஏப்ரல் 2023).

### *DLFAன் தணிக்கையில் இருந்த நிலுவைகள்*

**ஊராட்சி அமைப்புகள்:** மார்ச் 2023 நிலவரப்படி, 2021-22ஆம் ஆண்டிற்கென திட்டமிடப்பட்டிருந்த, அனைத்து, வட்டார ஊராட்சிகள், மாவட்ட ஊராட்சிகள் மற்றும் 2,839 கிராம ஊராட்சிகளின் தணிக்கையை DLFA முடித்திருந்தது.

மார்ச் 2023 நிலவரப்படி, வட்டார ஊராட்சிகள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் தொடர்பான DLFAன் ஆய்வு அறிக்கைகளில் (IRக்கள்) உள்ள பத்திகளின் நிலுவை விவரங்கள் **அட்டவணை 1.2ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 1.2: DLFAன் IRகளில் ஆண்டு வாரியாக நிலுவையில் உள்ள பத்திகள்**

| IR ஆண்டு | நிலுவையில் உள்ள பத்திகளின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | வட்டார ஊராட்சிகள் | மாவட்ட ஊராட்சிகள் |
| 2017-18 வரை | 23,559 | 234 |
| 2018-19 | 8,172 | 81 |
| 2019-20 | 11,933 | 133 |
| 2020-21 | 14,752 | 218 |
| 2021-22 | 16,306 | 197 |
| **மொத்தம்** | **74,722** | **863** |

(ஆதாரம்: DLFA வழங்கிய விவரங்கள்)

2019-20ஆம் ஆண்டு வரையிலான நிலுவைப் பத்திகளில், வட்டார ஊராட்சிகளில் இருந்த 74,722 பத்திகளில் 43,664ம் (58 விழுக்காடு) மற்றும் மாவட்ட ஊராட்சிகளில் இருந்த 863 பத்திகளில் 448ம் (52 விழுக்காடு) தீர்க்கப்படாமல் நிலுவையில் இருந்ததை தணிக்கை பகுப்பாய்வு வெளிப்படுத்தியது. நீண்ட காலமாக நிலுவையில் உள்ள பத்திகளைத் தீர்ப்பதற்கு போதுமான கவனம் செலுத்தப்படவில்லை என்பதை இது சுட்டிக்காட்டுகிறது.

2020-22 ஆண்டுகள் வரை, 57 உயர்மட்டக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டதாகவும், வட்டார ஊராட்சிகள் தொடர்பான 1,095 பத்திகள் தீர்க்கப்பட்டதாகவும் DLFA தெரிவித்துள்ளார் (மார்ச்/நவம்பர் 2022).

**நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்:** ஏப்ரல் 2023 நிலவரப்படி, ULBகளின் மீது DLFAஆல் நடத்தப்பட்ட தணிக்கையின் நிலவரம் **அட்டவணை 1.3ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 1.3: ULBகளின் மீது DLFAஆல் மேற்கொள்ளப்பட்ட தணிக்கையின் நிலவரம்**

**(எண்களில்)**

| ஆண்டு | விவரங்கள் | மாநகராட்சிகள் | நகராட்சிகள் | பேரூராட்சிகள் |
|---|---|---|---|---|
| 2019-20 | ULBகளின் எண்ணிக்கை | 12 | 124 | 528 |
| | DLFAயிடம் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் | 12 | 124 | 528 |
| | முடிவுற்ற தணிக்கை | 12 | 124 | 528 |
| | நிலுவையில் உள்ள தணிக்கை | 0 | 0 | 0 |
| 2020-21 | ULBகளின் எண்ணிக்கை | 15 | 121 | 528 |
| | DLFAயிடம் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் | 15 | 121 | 528 |
| | முடிவுற்ற தணிக்கை | 15 | 121 | 528 |
| | நிலுவையில் உள்ள தணிக்கை | 0 | 0 | 0 |
| 2021-22 | ULBகளின் எண்ணிக்கை | 21 | 138 | 490 |
| | DLFAயிடம் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் | 21 | 138 | 490 |
| | முடிவுற்ற தணிக்கை | 21 | 138 | 490 |
| | நிலுவையில் உள்ள தணிக்கை | 0 | 0 | 0 |

(ஆதாரம்: DLFA வழங்கிய விவரங்கள்)

ஆகஸ்ட் 2022 நிலவரப்படி, 2021-22 ஆம் ஆண்டு வரையில் DLFAன் IRகளில் சேர்க்கப்பட்டுள்ள, மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் தொடர்பான 1,74,465 நிலுவைப் பத்திகள் குறித்த விவரம் **அட்டவணை 1.4ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 1.4: DLFAன் பத்திகளின் ஆண்டு வாரியான நிலுவை விவரம்**

| IR ஆண்டு | நிலுவையில் உள்ள பத்திகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| | மாநகராட்சிகள் | நகராட்சிகள் | பேரூராட்சிகள் |
| 2017-18 வரை | 28,488 | 25,044 | 28,530 |
| 2018-19 | 4,294 | 6,390 | 9,743 |
| 2019-20 | 6,939 | 8,839 | 14,622 |
| 2020-21 | 7,057 | 11,133 | 22,208 |
| 2021-22 | 222 | 788 | 168 |
| **மொத்தம்** | **47,000** | **52,194** | **75,271** |

(ஆதாரம்: DLFA வழங்கிய விவரங்கள்)

மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் முறையே 47,000 நிலுவைப்பத்திகளில் 28,488ம் (61 விழுக்காடு), 52,194 பத்திகளில் 25,044ம் (48 விழுக்காடு) மற்றும் 75,271 பத்திகளில் 28,530ம் (38 விழுக்காடு) 2017-18 வரையிலான ஆண்டுகள் தொடர்பானவை என்பதைத் தணிக்கைப் பகுப்பாய்வு வெளிப்படுத்தியது. நீண்ட காலமாக நிலுவையில் உள்ள பத்திகளைத் தீர்ப்பதற்குப் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை என்பதை இது சுட்டிக்காட்டுகிறது.

மேற்கூறப்பட்டுள்ள நிலுவையில் உள்ள பத்திகளைத் தீர்ப்பதற்காக, 2020-22ல், 23 கூட்டங்கள் நடத்தப்பட்டன என்றும், இதன் விளைவாக, 846 பத்திகள் தீர்க்கப்பட்டன என்றும் DLFA தெரிவித்துள்ளார் (நவம்பர் 2022).

### 1.5.2 இந்திய தணிக்கைத் தலைவரின் (CAG) தணிக்கை

CAGன் (கடமைகள், அதிகாரங்கள் மற்றும் சேவையின் நிபந்தனைகள்) சட்டம், 1971ன் பிரிவுகள் 20 மற்றும் 14 (2)ன் கீழ் முறையே PRIகள் (நிதி உதவி வழங்குவது தொடர்பாக) மற்றும் ULBகளின் தணிக்கை நடத்தப்படுகிறது. பேரூராட்சிகளின் மீதான DLFAன் தணிக்கை அறிக்கைகளின் உள்ளடக்கம் மற்றும் தரம் தொடர்பான தொழில்நுட்ப உதவி மற்றும் ஆலோசனைகள், CAGஆல் DLFAக்கு வழங்கப்படுகிறது.

*CAGன் தணிக்கை அறிக்கைகள்*

தணிக்கை அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள தணிக்கைக் குறிப்புகள் குறித்து விளக்கக் குறிப்புகளை அரசுத் துறைகள் வழங்குவதற்கான காலக்கெடுவை, தணிக்கை அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதம் என சட்டமன்றத்தின் பொதுக் கணக்குக் குழு (Committee on Public Accounts -PAC), நிர்ணயித்திருந்தது. விளக்கக் குறிப்பில், துறைகளால் எடுக்கப்பட்ட அல்லது எடுக்கும்படி தீர்மானிக்கப்பட்ட திருத்த நடவடிக்கையைக் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

மார்ச் 2023 நிலவரப்படி, 2008-09 முதல் 2019-20 வரையிலான ஆண்டுகளுக்கான CAGன் தணிக்கை அறிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ள, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை (Rural Development and Panchayat Raj -RD&PR) மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (Municipal Administration and Water Supply - MAWS) துறை ஆகியவை தொடர்பான 40 மற்றும் 136 பத்திகள் குறித்த விவாதம் நிலுவையில் உள்ளது. இவற்றில், RD&PR துறை மற்றும் MAWS துறை முறையே 31 பத்திகள்/செயலாக்கத் தணிக்கைகள் மற்றும் 67 பத்திகள் மீதான விளக்கக் குறிப்புகளை வழங்கவில்லை.

CAGன் தணிக்கை அறிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ள, RD&PR மற்றும் MAWS துறைகள் தொடர்பான பத்திகளுள் முறையே, 2008-09 மற்றும் 2006-07 வரையிலானவைகள் விவாதிக்கப்பட்டு, PACஆல் பரிந்துரைகள் வழங்கப்பட்டன. மார்ச் 2023 நிலவரப்படி, 1989-2011 ஆண்டுகளில், PACஆல் பரிந்துரைக்கப்பட்ட RD&PR துறையின் 129 பரிந்துரைகள் PACஆல் தீர்வு செய்யப்படாமல் நிலுவையில் இருந்தன. அவற்றுள் 26 பரிந்துரைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைக் குறிப்புகளை துறை வழங்கவில்லை. இதேபோல், 1987-2007 ஆண்டுகளில், PACஆல் பரிந்துரைகள் அளிக்கப்பட்ட MAWS துறையின் பத்திகளில், 171 பரிந்துரைகள் PACஆல் தீர்வு செய்யப்படாமல் நிலுவையில் இருந்தன, அவற்றுள், 91 பரிந்துரைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைக் குறிப்புகளை துறை வழங்கவில்லை.

## 1.6 CAGன் தணிக்கை குறிப்புகளுக்கான பதிலுரைகள்

**ஊராட்சி அமைப்புகள்:** மாவட்ட ஊராட்சிகள் மற்றும் வட்டார ஊராட்சிகளின் பதிவுகள் மீதான சோதனை தணிக்கையின் போது கண்டறியப்பட்ட குறைபாடுகள், சம்பந்தப்பட்ட மாவட்ட ஊராட்சிகள் மற்றும் வட்டார ஊராட்சிகள் மற்றும் CRDPRக்கு வழங்கப்பட்ட IRகள் மூலம் பின்தொடரப்படுகிறது. மார்ச் 2023 நிலவரப்படி, 31 மார்ச் 2022 வரை

வழங்கப்பட்ட 366 IR தொடர்பான 1,633 பத்திகள் திருப்திகரமான பதில்கள் இல்லாததால் தீர்க்கப்படவில்லை.

**நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்:** ULBகளின் பதிவுகள் மீதான சோதனை தணிக்கையின் குறிப்புகள், தொடர்புடைய ULBகளுக்கும், GCC ஆணையர், நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் பேரூராட்சி இயக்குநருக்கும் வழங்கப்பட்ட IRகள் மூலம் பின்தொடரப்படுகிறது. செப்டம்பர் 2022 நிலவரப்படி, 31 மார்ச் 2022 வரை வழங்கப்பட்ட 991 IRக்கள் சம்பந்தப்பட்ட 4,745 பத்திகள் திருப்திகரமான பதில்கள் இல்லாததால் தீர்க்கப்படவில்லை.

## PRIகள் மற்றும் ULBகளில் பொறுப்பு முறைமை

### 1.7 முறைமன்ற நடுவம் (Ombudsman)

பதின்மூன்றாவது CFCன் பரிந்துரைகளின் பத்தி 10.161(iii)ன் படி, உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் ஆகியோருக்கு எதிரான ஊழல் மற்றும் நிர்வாக முறைகேடுகள் குறித்த புகார்களை விசாரித்து, அவர்கள் மீது தகுந்த நடவடிக்கையைப் பரிந்துரைக்க ஒரு சுயாதீனமான உள்ளாட்சி முறைமன்ற நடுவ அமைப்பை மாநில அரசு ஏற்படுத்த வேண்டும். தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம், 2014, மாநில சட்டமன்றத்தால் டிசம்பர் 2014ல் இயற்றப்பட்டது. மேலும் மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளில், தமிழ்நாடு உள்ளாட்சிகளின் முறைமன்ற நடுவ அமைப்பு மார்ச் 2015ல் நிறுவப்பட்டது.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம், 2014ல், BP மற்றும் VPக்களை உள்ளடக்கப்படாததால், 2021-22ஆம் ஆண்டில் பெறப்பட்ட BP மற்றும் VPக்கள் தொடர்பான எழுபது புகார்கள் மீது தேவையான நடவடிக்கை மேற்கொள்ள தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுப்பப்பட்டன.

2021-22 ஆம் ஆண்டில், ULBகள் மற்றும் அதன் பொது ஊழியர்களுக்கு எதிராக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவத்தில் 225 புகார்கள் பெறப்பட்டன. அவற்றில் 124 புகார்கள் தீர்க்கப்பட்டு மீதமுள்ள 101 புகார்கள் விசாரணை நிலையில் உள்ளன.

### 1.8 PRIகளில் சமூகத் தணிக்கை

தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம், 2005ன் பிரிவு 15(5)(ஈ)ன் படி, ஒரு VPன் அதிகார வரம்பில் செய்யப்படும் அனைத்துப் பணிகளின் சமூக தணிக்கை கிராம சபையால் மேற்கொள்ளப்பட்டு, அதில் எழுப்பப்படும் தணிக்கைக் குறிப்புக்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டம், 1975ன் கீழ் ஒரு சங்கமாக பதிவு செய்யப்பட்ட தமிழ்நாடு சமூக தணிக்கை சங்கம் (Social Audit Society of Tamil Nadu - SASTA) என்ற ஒரு சுயாதீன அமைப்பை மாநில அரசு நிறுவியது (ஜனவரி 2013). 2021-22ல், 12,524 VPகளில் சமூக தணிக்கை நடத்தப்பட்டது.

## 1.9 மத்திய நிதி ஆணையத்தின் மானியம் மற்றும் பயனீட்டு சான்றிதழ்கள் அளித்தல்

**ஊராட்சி அமைப்புகள்:** கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியங்கள், அடிப்படை-வரையறுக்கப்படாத மானியங்கள் (Basic-untied grants) மற்றும் வரையறுக்கப்பட்ட மானியங்கள் (Tied grants) என இரண்டு பகுதிகளாக, முறையே, 40:60 என்ற விகிதத்தில் இருக்க வேண்டும் என்று பதினைந்தாவது மத்திய நிதி ஆணையம் (CFC) பரிந்துரைத்துள்ளது. அதன்படி, 2021-22 ஆம் ஆண்டிற்கான அடிப்படை-வரையறுக்கப்படாத (₹1,066.40 கோடி) மற்றும் வரையறுக்கப்பட்ட |(₹1,599.60 கோடி) மானியங்களாக ₹2,666 கோடி, மத்திய அரசால் (Government of India - GoI) ஒதுக்கப்பட்டது. மாநில அரசு CRDPR மூலம் PRI களுக்கு மானியங்களை வழங்கியது. PRIகளுக்கான மானியங்கள் அளிப்பு அடிப்படையில், அக்டோபர் 2021 (CFC மானியத்தின் முதல் தவணைக்காக) மற்றும் மே 2022ல் (CFC மானியத்தின் இரண்டாவது தவணைக்காக) பயனீட்டுச் சான்றிதழ்களை (Utilisation Certificates - UCக்கள்) மத்திய அரசிடம் மாநில அரசு வழங்கியது.

**நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்**: மாநிலத்தில் உள்ள ULBகளுக்கு, 2021-22 ஆம் ஆண்டிற்கான பதினைந்தாவது CFC மானியமாக, ₹1,886.26 கோடி மத்திய அரசால் அனுமதிக்கப்பட்டு, மாநில அரசால் அவற்றிற்கு வழங்கப்பட்டது. ULBகளைப் பொறுத்தவரை, திட்டத்திற்கான மானியங்கள் தொடர்பான UCகள், நிதியாண்டில் செய்யப்பட்ட உள்ளபடியான செலவினங்களின் அடிப்படையில் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு வருவதாக மாநில அரசு பதிலளித்தது (அக்டோபர் 2022).

## 1.10 உள் தணிக்கை மற்றும் உள் கட்டுப்பாடு முறைமை

**ஊராட்சி அமைப்புகள்:** செலவினங்களைக் காலமுறையில் அறிக்கையிடல், கிராம சபையின் ஆய்வு மற்றும் உள் தணிக்கை ஆகியவை PRIகளின் உள்கட்டுப்பாட்டு முறைகளில் அடங்கும். VPகள் தங்கள் செலவினங்கள் குறித்த மாதாந்திர அறிக்கைகளை வட்டார வளர்ச்சி அலுவலரிடம் (BDO) அனுப்புகின்றனர். இவை வட்டார மற்றும் மாவட்ட அளவில் கண்காணிக்கப்படுகின்றன. ஒரு துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (தணிக்கை) வட்டார மட்டத்தில் உள்ள VPகளின் தணிக்கைக்கு பொறுப்பாக உள்ளார். இது மாவட்ட அளவில் உதவி தணிக்கை இயக்குநரால் மதிப்பாய்வு செய்யப்படுகிறது. மேலும், VPஆல் மேற்கொள்ளப்பட்ட அனைத்து செலவுகளும் கிராம சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. ஒவ்வொரு தொகுதி பஞ்சாயத்திலும் உள்ள DLFA ஊழியர்கள் அதன் கணக்குகளை உடனுக்குடனான தணிக்கை (Concurrent Audit) செய்தனர்.

**நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்:** GCCன் நிதி ஆலோசகர், பெருநகர சென்னை மாநகராட்சியின் தணிக்கை மற்றும் கணக்குகளை சரிபார்ப்பதற்கான ஒட்டுமொத்த கட்டுப்பாட்டாளராக இருந்தார். GCCன் தலைமை கணக்கு அதிகாரிகள், GCCன் அந்தந்த மண்டலங்களில் உள் தணிக்கையை மேற்கொள்கின்றனர். GCC மற்றும் மாநகராட்சிகள், சிறப்பு

நிலை நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் ஆணையரகத்தின் சட்டரீதியான வருடாந்திர தணிக்கையை மாவட்ட தணிக்கை பணியாளர்கள் மூலம் DLFA மேற்கொள்ளும்.

## 1.11 ULBகளில் மற்ற பொறுப்பு முறைமைகள்

### 1.11.1 சொத்து வரி வாரியம்

மாநில சட்டமன்றம், தமிழ்நாடு மாநில சொத்து வரி வாரியச் சட்டம், 2013ஐ இயற்றியது (மே 2013) மற்றும் மாநில அரசு தமிழ்நாடு மாநில சொத்து வரி வாரிய விதிகள், 2014ஐ உருவாக்கியது (அக்டோபர் 2014). நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் முதன்மைச் செயலாளர் தலைமையில், மூன்று அலுவல் வழி உறுப்பினர்களைக் கொண்ட தமிழ்நாடு மாநில சொத்து வரி வாரியத்தை மாநில அரசு அமைத்தது (ஜனவரி 2018). ஏப்ரல் 2018 மற்றும் பிப்ரவரி 2019 ஆகிய இரண்டு ஆண்டுகளில் இரண்டு கூட்டங்களை வரி வாரியம் நடத்தியது.

### 1.11.2 சேவை நிலை ஒப்பீட்டு அளவு

பதின்மூன்றாவது CFC பரிந்துரைகளின் பத்தி 10.161(viii)ன் படி, குடிநீர் வழங்கல், கழிவுநீர் அகற்றுதல், மழைநீர் வடிகால் மற்றும் திடக்கழிவு மேலாண்மை ஆகிய நான்கு சேவைத் துறைகளுக்கான சேவைத் தரங்களை அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கு மாநில அரசுகள் அறிவிக்க வேண்டும். இது அடுத்த நிதியாண்டின் இறுதிக்குள் அவர்களால் அடையப்பட வேண்டும்.

அனைத்து ULBகளும், 2016-17 முதல் 2021-22 வரையிலான சேவை நிலை அளவுகோல்களை அறிவித்துள்ளன. நான்கு சேவைகளுக்கான சேவை நிலை ஒப்பீட்டு அளவுகள் (service level benchmarks) GCC இணையதளத்தில் வழங்கப்பட்டுள்ளதாக GCC தெரிவித்துள்ளது (அக்டோபர் 2022).

### 1.11.3 தீ அபாயங்களை எதிர்கொள்ளுதல்

பதின்மூன்றாவது CFC பரிந்துரைகளின் பத்தி 10.161(ix)ன் படி, ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள்தொகை கொண்ட அனைத்து மாநகராட்சிகளும், தனது அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகளுக்கு தீ அபாயங்களை எதிர்கொள்ளும் வழிகள் மற்றும் தீ தணிப்புத் திட்டம் ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும். பதின்மூன்றாவது CFCன் இந்தப் பரிந்துரையை ஏற்றுக்கொண்டு மாநில அரசு அதற்கான அறிவிப்பினை நவம்பர் 2013ல் வெளியிட்டது.

உள்துறை அமைச்சகத்தின் கீழ் வரும் தீயணைப்பு சேவை, ஒரு தனி செயல்பாடாக ULBகளுக்கு வழங்கப்படவில்லை. இதற்கான நிதி ULBகளால் துறைக்கு வழங்கப்படுகின்றன.

GCC, கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகராட்சிகள், 2011-15 ஆண்டுகளுக்கு முறையே ₹2.68 கோடி, ₹0.51 கோடி மற்றும் ₹0.49 கோடி வழங்கியுள்ளன. ஏப்ரல் 2023 நிலவரப்படி, இதில் வாகனங்கள் மற்றும்

உபகரணங்களை வாங்குவதற்காக, ₹2.55 கோடி, ₹0.51 கோடி மற்றும் ₹0.49 கோடி தொகை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையால் பயன்படுத்தப்பட்டது. 2023-24 ஆம் ஆண்டில், தேவைப்படும் எஞ்சிய பொருட்களை வாங்குவதற்கு மீதித் தொகையைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் இயக்குநர் தெரிவித்தார் (ஏப்ரல் 2023).

## 1.12 PRIகள் மற்றும் ULBகளின் நிதி சார்ந்த அம்சங்கள்

### 1.12.1 நிதி ஆதாரம்

**ஊராட்சி அமைப்புகள்:** சொத்து வரி, தொழில் வரி மற்றும் விளம்பர வரி போன்ற வரிகளை விதிக்கும் அதிகாரத்தை VPகள் கொண்டுள்ளன. வரி அல்லாத வருவாய், ஒதுக்கப்பட்ட வருவாய் மற்றும் மாநில அரசின் மானியங்கள், பல்வேறு நோக்கங்களுக்காக மத்திய அரசால் வழங்கப்படும் மானியங்கள் மற்றும் மாநில மற்றும் மத்திய நிதி ஆணையங்களின் மானியங்கள் போன்றவை VPக்கள் மற்றும் BPகளுக்கான வரவுகளின் ஆதாரங்களாகும். மாநில நிதி ஆணைய (SFC) மானியங்கள், CFC மானியங்கள், மாநில அரசு மற்றும் மத்திய அரசு வழங்கும் மானியங்கள் மற்றும் ஒதுக்கப்பட்ட வருவாய் ஆகியவை CRDPR ஆல் மாவட்ட ஆட்சியர்கள் மூலம் வழங்கப்பட்டது.

2017-22 ஆண்டுகளில், PRIகளின் வரவுகள் மற்றும் செலவினங்களின் விவரங்கள் **அட்டவணை 1.5ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 1.5: PRIகளின் வரவினங்கள் மற்றும் செலவினங்களின் விவரங்கள்**

(₹ கோடியில்)

| விவரங்கள் | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| சொந்த வருவாய் | 797.00 | 731.93 | 470.24* | 436.13* | 1,627.14# |
| ஒதுக்கப்பட்ட வருவாய் | 510.88 | 407.71 | 1,053.45 | 618.42 | 850.37 |
| மானியங்கள் | 6,631.73 | 7,655.73 | 7,211.95 | 8,930.43 | 8,815.23 |
| **மொத்த வரவினங்கள்** | **7,939.61** | **8,795.37** | **8,735.64** | **9,984.98** | **11,292.74** |
| வருவாய் செலவினம் | 3,362.16 | 3,584.57 | 3,853.99 | 4,293.10 | 4,376.12 |
| மூலதன செலவினம் | 4,223.34 | 4,943.04 | 3,644.68 | 5,504.16 | 6,450.22 |
| **மொத்த செலவினம்** | **7,585.50** | **8,527.61** | **7,498.67** | **9,797.26** | **10,826.34** |
| **மொத்த செலவினத்தில் மூலதன செலவினத்தின் விழுக்காடு** | **56** | **58** | **49** | **56** | **60** |

* கோவிட்-19 பெருந்தொற்றின் காரணமாக சொந்த வருவாய் வெகுவாகக் குறைந்திருந்தது

# 2021-22ல் சொந்த வருவாயின் அதிகரிப்பானது, நிலுவைத் தொகை வசூல் மற்றும் சொந்த வருவாய்க்கென இணைய வழியில் மேற்கொள்ளப்பட்ட புதிய முயற்சிகளால் ஏற்பட்டது.

(ஆதாரம்: CRDPR வழங்கிய விவரங்கள்)

**நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்:** 2017-22 ஆண்டுகளுக்கான, ULBகளின் வரவினங்கள் மற்றும் செலவினங்கள் **அட்டவணை 1.6ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 1.6: ULBகளின் வரவினங்கள் மற்றும் செலவினங்கள்**

(₹ கோடியில்)

| விவரங்கள் | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| சொந்த வருவாய் | 4,412.48 | 5,792.83 | 5,639.65 | 3,781.53 | 4,027.49 |
| ஒதுக்கப்பட்ட வருவாய் | 437.92 | 486.51 | 569.26 | 1,141.34 | 1,045.75 |
| மானியங்கள் | 6,562.20 | 7,804.83 | 8,266.35 | 6,145.63 | 4,332.32 |
| கடன்கள் | 1,501.35 | 464.19 | 282.69 | 1,388.34 | 3,213.45 |
| **மொத்த வரவினங்கள்** | **12,913.95** | **14,548.36** | **14,757.95** | **12,456.84** | **12,619.02** |
| வருவாய் செலவினம் | 7,132.44 | 8,166.93 | 8,290.13 | 8,947.95 | 7,541.50 |
| மூலதன செலவினம் | 3,515.67 | 4,026.92 | 4,711.74 | 6,705.77 | 6,194.09 |
| **மொத்த செலவினம்** | **10,648.11** | **12,193.85** | **13,001.87** | **15,653.72** | **13,735.58** |
| **மொத்த செலவினத்தில் மூலதன செலவினத்தின் விழுக்காடு** | **33** | **33** | **36** | **43** | **45** |

(ஆதாரம்: GCC, DMA மற்றும் CTP வழங்கிய விவரங்கள்)

2017-22 ஆண்டுகளில், மொத்த வரவினத்தில் வருவாய்/மூலதனச் செலவினம் மற்றும் ஏற்பட்ட சேமிப்பு/அதிகப்படியான செலவினம் ஆகியவற்றின் விழுக்காடு **அட்டவணை 1.7ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 1.7: மொத்த வரவினத்தில் வருவாய் செலவினங்கள்/மூலதனச் செலவினங்கள். ஏற்பட்ட சேமிப்பு/அதிகப்படியான செலவினம் ஆகியவற்றின் விழுக்காடு**

| விவரங்கள் | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|---|
| வருவாய் செலவினம் | 55 | 56 | 56 | 72 | 60 |
| மூலதன செலவினம் | 27 | 28 | 32 | 54 | 49 |
| சேமிப்பு (-) / அதிகப்படியான செலவினம் (+) | (-) 18 | (-) 16 | (-) 12 | (+) 26 | (+) 9 |

2017-2022 ஆண்டுகளில் மூலதனச் செலவினம், மொத்த வரவுகளில் 27 விழுக்காடு முதல் 54 விழுக்காடு வரையாக இருந்தது, மொத்த வரவுகளில் வருவாய் செலவினம் 55 விழுக்காடு முதல் 72 விழுக்காடு வரை இருந்தது.

### 1.12.2 மாநில நிதி ஆணைய மானியம்

டிசம்பர் 2014ல் அமைக்கப்பட்ட ஐந்தாவது SFC, அதன் பகிர்வு நிதிகளை ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு இடையே 56:44 என்ற பகிர்மான விகிதத்தில் (Vertical Sharing Ratio) மேற்கொள்ள பரிந்துரைத்தது (டிசம்பர் 2016). PRIகளில், கிராம ஊராட்சிகள், வட்டார ஊராட்சிகள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளிடையே 55:37:8 என்ற பகிர்வு விகிதம் (Vertical Sharing Ratio) பரிந்துரைக்கப்பட்டது. ULBகளில், SFC பகிர்வு நிதி மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளிடையே 40:29:31 என்ற விகிதத்தில் இருந்தது (Horizontal Sharing Ratio). மாநில அரசு, பரிந்துரைகளை

மார்ச் 2017ல் ஏற்றுக்கொண்டது. 2021-22 ஆம் ஆண்டில் PRI மற்றும் ULBகளுக்கு வழங்கப்பட்ட SFC மானியத்தின் அளவு முறையே ₹4,304.46 கோடி மற்றும் ₹4,647.58 கோடியாக இருந்தது.

### 1.12.3 கணக்குகள் பராமரிப்பு

**ஊராட்சி அமைப்புகள்:** PRIகளின் கணக்குகளை பராமரிப்பதில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு, 2009 ஆம் ஆண்டில், 'ஊராட்சிகளுக்கான மாதிரி கணக்கியல் அமைப்பு' ('Model Accounting System for Panchayats') என்ற புதிய எளிமைப்படுத்தப்பட்ட கணக்கியல் கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. PRIகளின் மூன்று அடுக்குகளும் பயன்படுத்துவதற்கென்று, மையப்படுத்தப்பட்ட கணக்கியல் மென்பொருளை நிறுவுவதற்காக, ஊராட்சி நிறுவனங்களின் கணக்கியல் மென்பொருளை (PRIASoft) தேசிய தகவல் மையம் (NIC) ஊராட்சி அமைச்சரகத்துடன் கலந்தாலோசித்து உருவாக்கியது. அனைத்து PRIகளும் 2020-21 வரை PRIASoftஐப் பயன்படுத்தி கணக்குகளின் இணையவழி பதிவேற்றத்தை முடித்துவிட்டதாகவும், PRIASoft இணையவழி போர்ட்டல் eGramSwaraj போர்ட்டலுடன் இணைக்கப்பட்டுள்ளதால் 2021-22க்கான கணக்குகளை eGramSwaraj பயன்பாட்டில் பதிவேற்றியுள்ளதாகவும் CRDPR பதிலளித்தார் (பிப்ரவரி 2023).

**நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்:** தேசிய நகராட்சி கணக்கியல் கையேட்டில் (National Municipal Accounting Manual - NMAM) குறிப்பிடப்பட்டுள்ள கொள்கைகள், ULBகளால் ஆண்டுக் கணக்குகள் தயாரிக்கப்படும் பொழுது பின்பற்றப்படுகின்றன என்று அரசு தெரிவித்தது (அக்டோபர் 2022). கணக்குகள் நிதி வாரியாக பராமரிக்கப்படுகின்றன மற்றும் வருடாந்திர கணக்கீட்டு அறிக்கை, வரவு மற்றும் செலவு கணக்கு மற்றும் இருப்புநிலை அறிக்கை (balance sheet) ஆகியவை திரட்டல் அடிப்படையில் (accrual basis) தயாரிக்கப்படுகின்றன. GCCஐப் பொறுத்தவரை, கணக்குகளின் அட்டவணை (chart of accounts) திருத்தப்பட்டு, 2021-22 வரையிலான கணக்குகள் NMAMக்கு இணங்க இறுதி செய்யப்பட்டன என்றும் கூறப்பட்டது.